


இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 176 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 23 – புதன்கிழமை 05 பிப்ரவரி 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 176 : Thiruvalluvar Year - 2056 - Thai 23 - Wednesday 05 February 2025 - Dak 12 Pages ₹ 5.00


## காலநிலைக் கல்வியறிவை ஒரு இயக்கமாக முன்னெடுத்திட

# அனைத்துப் பள்ளிகளிலும் ‘சூழல் மன்றங்கள்’!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் நடைபெற்ற காலநிலை உச்சி மாநாடு 3.0ல், தமிழ்நாடு பருவநிலை மாற்ற இயக்கத்தின் சார்பில் “காலநிலைக்கு ஏற்ற வாழ்க்கை முறை” (Lifestyle for Climate) ஆவணத்தை வெளியிட்டார்.இந்த மாநாட்டில் வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. செந்தில் குமார், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஏ.ஆர். ராகுல்நாத், தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் எரிக் சொல்ஹெய்ம், டாக்டர் சவுமியா சுவாமிநாதன், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் திருமதி ஜெயந்தி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீநிவாஸ் ஆர். ரெட்டி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (ஆராய்ச்சி) செல்வி மிதா பானர்ஜி, தலைமை வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, பிப். 5 -**

**“காலநிலைக் கல்வியறிவை ஒரு இயக்கமாக முன்னெடுத்திட அனைத்துப் பள்ளிகளிலும் ‘சூழல் மன்றங்கள்’ ஏற்படுத்தப்படும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாட்டில் உரையாற்றும் போது அறிவித்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாட்டில் (3.0) ஆற்றிய உரை வருமாறு :-

தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.0 நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**காலநிலை மாற்றம்தான் மிகப் பெரிய சவால்!**

காலநிலை மாற்றம்தான் இன்றைக்கு உலக நாடுகளும், மானுட சமுதாயமும் எதிர்கொண்டிருக்கக்கூடிய மிகப்பெரிய சவால்! அதனால்தான், இதை பற்றிய விழிப்புணர்வைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறோம். இந்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், அதை எதிர்கொள்வதற்கான பல்வேறுநடவடிக்கைகளையும்தொடர்ந்து எடுத்துக்கொண்டு இருக்கிறோம். அதில் ஒரு பகுதியாக, என்னுடைய தலைமையில், காலநிலை மாற்ற நிர்வாகக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. காலநிலை மாற்றம் குறித்து ஆராய, இந்திய மாநிலங்களிலேயே முதன்முதலாக மாநாடு நடத்தியது நம்முடைய தமிழ்நாடுதான்!

அதுமட்டுமல்ல, துறையின் பெயரையே “சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை” என்று மாற்றியிருக்கிறோம். இந்த வரிசையில்,

- தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்,
- பசுமைத் தமிழ்நாடு இயக்கம்,
- தமிழ்நாடு ஈரநில இயக்கம்,
- தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்

ஆகிய நான்கு சிறப்பு இயக்கங்கள் மூலமாக இதற்கான முன்னெடுப்புகளை நம்முடைய அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் ஒருபகுதியாகதான், ஆண்டுதோறும் காலநிலை உச்சி மாநாடுகளை நடத்திக்கொண்டு இருக்கிறோம்.

இந்த மாநாடுகள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின்கீழ் செயல்பட்டுவரும், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இது வரைக்கும், தமிழ்நாட்டில் இரண்டு காலநிலை உச்சி மாநாடுகளை நம்முடைய அரசு வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையில், நம்மை தகவமைத்துக் கொள்ள விவாதங்களை முன்னெடுப்பதற்கான தளமாக இந்த மாநாட்டை நாம்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## ஈரோடு கிழக்கு தொகுதிக்கு இடைத்தேர்தல்! இன்று வாக்குப்பதிவு!

*ஈரோடு, பிப். 5 -*

*ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், கடந்த டிசம்பர் மாதம் மறைவெய்தியதைத் தொடர்ந்து அத்தொகுதிக்கு இன்று இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் உட்பட 46 பேர் களத்தில் உள்ளனர். தேர்தலையொட்டி, கடந்த 15 நாட்களுக்கு மேலாக நடைபெற்று வந்த அனல் பறக்கும் பிரச்சாரம், நேற்று முன்தினம் மாலையுடன் நிறைவடைந்தது.*

*இந்த நிலையில் இன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதில் 2 லட்சத்து 27 ஆயிரத்து 237 பேர் வாக்களிக்கின்றனர். தேர்தலையொட்டி முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. வாக்களிக்க வசதியாக, 53 இடங்களில் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 850 வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.*

*ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து துப்பாக்கி ஏந்திய மத்திய தொழில் பாதுகாப்பு படை வீரர்களின் பாதுகாப்புடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்குச்சாவடி மையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தக்கூடிய 85 வகையான பொருட்களும் எடுத்துச்செல்லப்பட்டன.*

*இடைத்தேர்தல் பணியில் 1,195 அலுவலர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.. மேலும், 2 ஆயிரத்து 675 காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட உள்ளனர்*

*இதற்கிடையே, வாக்குப்பதிவு நடைபெறும் இடங்களில் மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் வாக்காளர்கள் வெயிலில் நிற்பதை தவிர்ப்பதற்காக நிழல்பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.*

## சங்கத்தமிழ் நாள்காட்டி வெளியீடு!

# கலைஞர் கருவூலம் சிறப்பு இணையப் பக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை. பிப். 5 -**

**கலைஞர் கருவூலம் சிறப்பு இணையப் பக்கத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, சங்கத்தமிழ் நாள்காட்டியினை வெளியிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2025) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் செயல்படும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள கலைஞர் கருவூலம் சிறப்பு இணையப் பக்கத்தை (https://www.tamildigitallibrary.in/kalaignar) தொடங்கி வைத்து, சங்கத்தமிழ் நாள்காட்டியினை வெளியிட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடத்திய “தமிழிணையம் 99” மாநாட்டின் விளைவாக, தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவச் செய்திட தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் தமிழ் இணையக் கல்விக்கழகம் 17.02.2001 அன்று உருவாக்கப்பட்டது. இந்நிறுவனத்தால் 39 நாடுகளில் 181 தொடர்பு மையங்கள் மூலமாக 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு இணையவழியில் தமிழ் கற்பிக்கப்படுவதுடன், கணித்தமிழ் தொடர்பான ஆய்வுகள் மற்றும் கருவிகளை உருவாக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மேலும், அறிவைப் பொதுமை செய்யும் நோக்கத்தில் தமிழ் மின்நூலகம் (https://www.tamildigitallibrary.in) உருவாக்கப்பட்டு, தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாடு, அறிவியல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் 8 லட்சத்துக்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிப் பக்கங்களைப் பதிவேற்றம் செய்து, உலகெங்கும் வாழும் தமிழ் ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் பயன்படும் வகையில் கட்டணமில்லாச் சேவையினை வழங்கிவருகின்றது. இந்த மின்நூலகம் கடந்த மூன்றரை ஆண்டுகளில் மட்டும் பத்தரை கோடி பார்வைகளை எட்டியுள்ளது. இதுவரை மொத்தம் பன்னிரெண்டு கோடிக்கும் மேற்பட்ட பார்வைகளைக் கடந்து பயணிக்கிறது.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ள ‘கலைஞர் கருவூலம்’ என்ற சிறப்பு இணையப் பக்கத்தை (https://tamildigitallibrary.in/kalaignar) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார்.

இப்பக்கத்தில் இலக்கியம், இதழியல், உரைகள், திரைப்படங்கள், காலப்பேழை, கலைஞர் குறித்து எனும் தலைப்புகளின் கீழ், 17 கலைஞரின் நாவல்கள், 36 சிறுகதைகள், 17 நாடகங்கள், 62 கவிதைகள், 18 கட்டுரைகள், 6 தன்வரலாறு, 7 இலக்கிய உரைகள், 322 கலைஞர் நடத்திய இதழ்களின் பிரதிகள், 18 ஆண்டு மலர்கள், 73 கடிதங்கள், 3 கேலிச்சித்திரங்கள், 36 சட்டமன்ற உரைகள், 89 சொற்பொழிவுகள், ஓர் நேர்காணல், 11 திரைக்கதை வசனங்கள், 2 பாடல்களின் தொகுப்புகள், 126 புகைப்படங்கள், 19 ஒலிப்பேழைகள், 9 காணொலிகள், 82 கலைஞர் குறித்த நூல்கள் மற்றும் 2 கலைஞர் குறித்த கட்டுரைகள், என மொத்தம் 955 அரிய உள்ளடக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

பண்பாட்டையும், நாகரிகத்தையும் அள்ளித் தரும் அரிய களஞ்சியமான சங்க இலக்கியங்கள் தமிழர்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. எனவே, சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டிலும் எட்டுத்தொகையிலும் உள்ள அறிவுச் செல்வங்களை இன்றைய தலைமுறை பெறுவது அவசியம். நம் பண்பாட்டில் தலைசிறந்து விளங்கும் அக வாழ்க்கையை எடுத்துரைக்கும் 211 பாடல்களும், தமிழர்களின் வீரம், கொடை, புகழ், கடமைகள், கல்விச் சிறப்பு முதலானவற்றை எடுத்தியம்பும் 141 புறப்பாடல்களும், அகமும் புறமும் சார்ந்து 14 பாடல்களும், என 366 பாடல்களைத் தேர்ந்தெடுத்து ஓவியங்களாக வரைந்து, விளக்கவுரை மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புடன் தயாரிக்கப்பட்டுள்ள சங்கத்தமிழ் நாள்காட்டியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

இப்பாடல்களுக்கான ஓவியங்கள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் ஓவியர்களால் வரையப்பட்டன. இச்சங்கத்தமிழ் நாள்காட்டி எல்லா ஆண்டுகளிலும் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் (Infinity Calendar), ஆங்கிலத் தேதிகளை மட்டும் குறிப்பிட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்ச் சமூகத்தின் ஒப்பற்ற மரபினை நினைவூட்டும் இச்சங்கத்தமிழ் நாள்காட்டி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மற்றும் தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் (SIPCOT) நிதி நல்கையுடன் தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் சே.ரா. காந்தி, இணை இயக்குநர் ரெ.கோமகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.